DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.193/2018**

Deposition of :PW - 7

| | | |
|---|---|---|
| Name | : திரு.கும்பலிங்கம் | Caste: |
| Father's Name | : திரு. | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றவாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 21st day of March -2023.

**Accused present.**

**முதல் விசாரணை**

எனது சொந்த ஊர் வாழப்பாடி தாலுக்கா மண்ணாய்க்கன்பட்டி. நான் தற்போது துக்கியாம்பாளையம் மேலூரில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். இறந்து போன முருகேசன் எனது பங்காளி அண்ணன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் முருகேசனின் மனைவி. 25.06.2017 அன்று நான் மேலூரில் இருந்த போது முருகேசன் இறந்துவிட்டாதாக தகவல் சொன்னார்கள். தகவல் கேள்விப்பட்டு முருகேசனின் வீட்டிற்கு காலை 08.30 மணிக்கு சென்றேன். அங்கு போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். பக்கத்தில் இருந்தவர்களை விசாரித்தார்கள். அதற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6.

முருகேசனுக்கு அதிகமான குடிப்பழக்கம் உண்டு. குடித்துவிட்டு தினசரி எதிரியிடம் சண்டை போடுவார். முருகேசன் இறந்ததற்கு முதல் நாள் இரவிலும் அது

போன்று சண்டை நடந்திருக்கிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

எதிரிதான் முருகேசனை கழுத்தை நெறித்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மண்ணாய்க்கன்பட்டிக்கும் மேலூருக்குமிடையே சுமார் 3 கி.மீ தொலைவு இருக்கும். முருகேசனின் உறவினர் என்ற அடிப்படையில்தான் நான் முருகேசனின் வீட்டிற்கு சென்றேன். போலீசார் நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதனை எனக்கு படித்து காண்பிக்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Sd/- **G. Sri Rama Jeyam)**
III Additional District Judge,
Salem.